**பெயர்– அசினாபீ**

**கணவர் பெயர்– அப்துல் ரகுமான்**

**நாள்–13.02.2024**

**O.S.215/2021**

**வா.சா 1 குறுக்கு விசாரணை :**

எனக்கும் பிரதிவாதிக்கும் 01.11.2009–ம் வருடம் திருமணம் நடைபெற்றது. திம்மராஜாம்பேட்டையில் உள்ள TKR திருமண மண்டபத்தில் எங்கள் திருமணம் நடைபெற்றது. முஸ்லீம் மத சம்பிரதாயப்படி எங்கள் திருமணம் நடைபெற்றது. எங்கள் திருமணம் ஏகனாம்பேட்டை ஜமாத்தில் பதிவு செய்யப்பட்டது. திருமணத்திற்கு பிறகு நாங்கள் வந்தவாசியில் குடும்பம் நடத்திவந்தோம். எனது திருமணத்திற்கு என் பெற்றோர் ரூ.10 லட்சம் செலவு செய்ததாக கூறுவதற்கு ஆதாரமாக ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எங்கள் திருமணம் இருவீட்டார் பேசி முடிவெடுத்து நடத்தப்பட்ட திருமணம் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு வலிமா என்ற திருமண வரவேற்பு எதிர்மனுதாரர் செலவு செய்து நடத்தினார் என்றால் சரியல்ல, நாங்களும் செலவு செய்தோம். எங்கள் திருமணத்திற்கு முன்பு வந்தவாசியில் உள்ள நவாப் ஜும்மா மசூதியில் தான் திருமணத்திற்கு ஒப்புதல் கொடுத்தார்கள். திம்மம்பேட்டையில் ஜமாத்தில் எங்கள் திருமணம் பதிவு செய்ததை காட்டுவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த பதிவு ஆவணத்தை தாக்கல் செய்தால் தான் எனது திருமணத்தை நிரூபிக்க முடியும் என்றால் அதற்கான நகலை எனது வழக்கறிஞரிடம் நான் கொடுத்திருக்கிறேன். எனது திருமணத்திற்கு ரூ.3 லட்சம் சீர்வரிசையாக கொடுத்தது மற்றும் 20 சவரன் நகை சீராக கொடுத்தது சம்மந்தமான எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வந்தவாசியில் தான் எனது திருமணம் பதிவு செய்யப்பட்டது என்பதால் இந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் குழந்தை இல்லை என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கேட்டு பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் விவாகரத்து கேட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன். என்ன காரணத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பிரதிவாதி குடித்துவிட்டு வந்து அடிப்பார் மற்றும் எனது நகையை அடகு வைத்து மீட்டு தருவதில்லை அது குறித்து கேட்டு

பிரச்சனை வருவதால் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்திருக்கிறேன். அவ்வாறு பிரதிவாதி நகையை அடகு வைத்தார் என்பதை காட்டுவதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அந்த ரசீதுகளை பிரதிவாதி தான் வைத்திருக்கிறார். நான் பிரதிவாதி குடித்துவிட்டு அடிப்பதாகவும், நகைகளை அடகு வைப்பதாகவும் தெரிவித்திருக்கும் காரணங்கள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வேன் விபத்துக்குள்ளானதாகவும், அதற்காக நான் எனது நகைகளை கொடுத்ததாக குறிப்பிட்டிருப்பதற்கு ஆதாரமாக எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மகளீர் காவல்நிலையத்தில் என்ன காரணத்திற்காக புகார் கொடுத்தேன் என்றால் பிரதிவாதி என்னை குடித்துவிட்டு அடிப்பதாகவும், மற்றும் எனது நகைகளை அடகு வைப்பதாகவும், குறிப்பிட்டு புகார் கொடுத்தேன். நான் மகளீர் காவல்நிலையத்தில் அழைத்து விசாரணை செய்த பிறகு பிரதிவாதியிடமிருந்து என்னுடைய நகைகளை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல, ஒரு சில நகைகளை தான் பிரதிவாதி கொடுத்தார். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் அவ்வாறு பிரதிவாதி ஒருசில நகைகைளை திரும்ப கொடுத்ததாக குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் இல்லை. அனைத்து மகளீர் காவல்நிலையத்தில் எங்கள் இருவரையும் அழைத்து விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். அவ்வாறு விசாரணை செய்த பின்பு பிரதிவாதியிடம் சேர்ந்து வாழ மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல, பிரதிவாதி குடிபழக்கத்தை விட்டுவிட்டால் மேலும் எனது நகைகளை அடகு வைப்பதை விட்டுவிட்டாலும் பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ்வதாக நான் தெரிவித்தேன். நான் பிரதிவாதிக்கு எதிராக ஜுவனாம்ச வழக்குதாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த நீதிமன்றத்தில் பிரதிவாதி ஆஜராகவில்லை. பிரதிவாதி என்னை கொடுகைப்படுத்தவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வீட்டை விட்டு வெளியில் வருவதில்லை என்றாலும், வீட்டில் இருந்துக்கொண்டு பிரதிவாதியை நான் தான் கொடுமைபடுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி தனிக்குடித்தனம் வரவேண்டும் என்று வற்புறுத்தினேன் என்றாலும் பிரதிவாதி அவ்வாறு தனிக்குடித்தனம் வர மறுத்ததால்தான் அவருடன் தகராறு செய்துக்கொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு விவாகரத்து கொடுக்க விருப்பமில்லை என்றாலும்,

என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் பிரதிவாதி குடித்துவிட்டு வந்து அடிப்பதால் பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ எனக்கு விருப்பமில்லை. வா.சா.ஆ.1 இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல. எனது திருமணத்தை பதிவு செய்த ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்குதள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R.ராஜேஸ்வரி,B.Com.,L.L.M.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.